DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)
(In the Court of the Assistant Sessions, Sankarankovil)
S.C.No. 55/2020
*****

Deposition of Witness for Prosecution witness No: PW7

LW 8

| | | |
|---|---|---|
| Name | : | டாக்டர் அன்னராஜ் |
| Father`s Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |
| Date | : | **28.08.2024** |

**( A1, A2 are present )**

Solemnly affirmed by Thiru.V.Balasubramanian, Subordinate Judge, Sankarankovil in accordance with section 6(2) of Act No.44 of 1969.

**முதல் விசாரணை**

I do solemnly affirm that what I shall state that shall be truth, the whole truth and nothing but the truth.

நான் தற்போது திருநெல்வேலி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் உதவி பேராசிரியராக பணியாற்றி வருகிறேன். நான் கடந்த 04.04.2019 அன்று இரவு 11.55 மணியளவில் சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் பணியில் இருந்த போது சாமிநாதபுரம் தெரு, மீன்துள்ளி ஊரை சார்ந்த 45 வயதுடைய முத்துபாண்டி என்பவரை அவரது நண்பர் ராஜா என்பவர் மருத்துவமனைக்கு சிகிச்சைகாக அழைத்து வந்தார். அதே தினம் இரவு சுமார் 9 மணியளவில் மீன்துள்ளி ஊரில் மேற்கு பகுதியில் வைத்து அவர் பூச்சி கொல்லி மருந்து அருந்தியதாக கூறினார். அவர் சுயநினைவுடன் இருந்தார். அவர் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது.

பின்பு அவர் சிகிச்சையில் இருந்த போது அவருக்கு பூச்சிகொல்லி மருந்து கொடுக்கப்பட்டதாக கூறினார். சிகிச்சை முடிந்து 10.04.2019 தேதி அன்று மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்டார். நான் அவருக்கு சிகிச்சை அளித்தேன். போலிசார் என்னை இதுசம்பந்தமாக விசாரணை செய்தார்கள். விபத்துபதிவேடு **அ.சா.ஆ.7** ஆகும்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

முத்துபாண்டி சிகிச்சைக்கு வரும்பொழுது சுயநினைவுடன் இருந்தார் என்றால் சரிதான். அன்றைய தினத்தில் உடனடியாக சிகிச்சைக்கு வந்தவுடன் முதல் சிகிச்சை உதவி அளித்து போலிசாருக்கு தகவல்தெரிவித்தேன் என்றால் சரிதான். முத்துபாண்டிக்கு வெளிப்புற காயங்கள் எதுவும் கிடையாது என்றால் சரிதான்.

**ம.வி இல்லை.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)
(In the Court of the Assistant Sessions, Sankarankovil)
S.C.No. 55/2020
*****

Deposition of Witness for Prosecution witness No: PW5

LW 4

| | | |
|---|---|---|
| Name | : | **ராஜேந்திரன்** |
| Father`s Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |
| Date | : | **28.08.2024** |

**( A1, A2 are present )**

Solemnly affirmed by Thiru.V.Balasubramanian, Subordinate Judge, Sankarankovil in accordance with section 6(2) of Act No.44 of 1969.

**முதல் விசாரணை**

I do solemnly affirm that what I shall state that shall be truth, the whole truth and nothing but the truth.

நான் தற்போது மலையாங்குளத்தில் குடியிருந்து வருகிறேன். சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்பு குருவிகுளம் போலிசார் ஒரு கையொப்பம் வாங்கினார்கள். அது எழுதாத வெள்ளைப் பேப்பர் ஆகும். எந்த வழக்கு சம்பந்தமாக என்பது பற்றி தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையது தான். அது அ.சா.ஆ.5 ஆகும். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை அனுமதி கோரியதன் பேரில் அனுமதி அளித்து அரசு தரப்பு குறுக்கு விசாரணை:**

கடந்த 05.04.2019 தேதி காலை 11 மணியளவில் குருவிகுளம் காவல் ஆய்வாளர் வழக்கின் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் வரைபடம் தயார் செய்ததாகவும், அந்த பார்வைமகஜரில் நீங்களும் உங்களை ஊரை சார்ந்த சௌந்தர் ராஜ் என்பவர் கையொப்பம் செய்ததாக போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்பொழுது எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கீறீர்கள் என்றால் சரியல்ல.

**ம.வி இல்லை.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)
(In the Court of the Assistant Sessions, Sankarankovil)
S.C.No. 55/2020
*****

Deposition of Witness for Prosecution witness No: PW6

LW5

| | | |
|---|---|---|
| Name | : | சௌந்தர்ராஜ் |
| Father`s Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |
| Date | : | **28.08.2024** |

**( A1, A2 are present )**

Solemnly affirmed by Thiru.V.Balasubramanian, Subordinate Judge, Sankarankovil in accordance with section 6(2) of Act No.44 of 1969.

**முதல் விசாரணை**

I do solemnly affirm that what I shall state that shall be truth, the whole truth and nothing but the truth.

நான் தற்போது மலையாங்குளத்தில் குடியிருந்து வருகிறேன். சுமார் 3, 4 வருடங்களுக்கு முன்பு போலிசார் எங்கள் ஊருக்கு வந்ததாக ஒரு கையொப்பம் கேட்டார்கள். நான் எழுதாத வெள்ளை பேப்பரில் கையொப்பம் போட்டு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையது தான். அது அ.சா.ஆ 6 ஆகும். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை அனுமதி கோரியதன் பேரில் அனுமதி அளித்து அரசு தரப்பு குறுக்கு விசாரணை:**

கடந்த 05.04.2019 தேதி காலை 11 மணியளவில் குருவிகுளம் காவல் ஆய்வாளர் வழக்கின் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் வரைபடம் தயார் செய்ததாகவும், அந்த பார்வைமகஜரில் நீங்களும் உங்களை ஊரை சார்ந்த ராஜேந்திரன் என்பவர் கையொப்பம் செய்ததாக போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்பொழுது எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கீறீர்கள் என்றால் சரியல்ல.

**ம.வி இல்லை.**